**மார்ச் – 11**

# TNPSC துளிகள்


- காஞ்சிபுரம், ஈரோடு, தர்மபுரி, சிவகங்கை, தேனி, கடலூர், நாகப்பட்டினம், இராணிப் பேட்டை மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் வேலை செய்யும் பெண்களுக்கான விடுதிகள் தொடங்கப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- கேர் எர்த் டிரஸ்ட் நிறுவனத்தின் இணை நிறுவனர் ஜெயஸ்ரீ வெங்கடேசனுக்கு, தமிழ் நாட்டின் நீர்நிலைகள் மற்றும் ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்குப் போராடியதற்காக, 'ஈரநிலங்களின் முறையானப் பயன்பாடு' என்ற ராம்சர் விருது வழங்கப்பட்டுள்ளது.
- குஜராத் மாநிலதின் தோலேரா நகரில் நாட்டின் முதல் வணிக ரீதியான குறைக்கடத்தி உற்பத்தி மையத்தினை நிறுவுவதற்காக என்று, இந்தியக் குறைக்கடத்தி உற்பத்தித் திட்டமானது (ISM) ஒரு நிதி ஆதரவு ஒப்பந்தத்தில் (FSA) கையெழுத்திட்டுள்ளது.
- அமுல் (குஜராத்தின் ஆனந்த் மில்க் யூனியன் லிமிடெட்) நிறுவனமானது அங்கு உள்ளூர் விவசாயிகளுக்கு ஒரு கூட்டுறவு மாதிரியை வழங்குவதற்காக வேண்டி, படிப்படியாக தமிழ்நாட்டின் பால் சந்தையில் நுழையத் திட்டமிட்டுள்ளது.
- எழுத்தாளர் நளினி ஜமீலாவின் சுயசரிதையான 'எனது ஆண்கள்' என்ற மலையாள மொழி புத்தகத்தின் மொழிபெயர்ப்பிற்காக தமிழ்நாட்டைச் சேர்ந்த P. விமலா, 2024 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி மொழிபெயர்ப்பு பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- பெண்கள் அதிகாரமளிப்பதில் பங்களித்ததற்காக வேண்டி அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் யசோதா சண்முக சுந்தரத்திற்கு தமிழக முதல்வர் அவ்வையார் விருதை வழங்கினார்.
- FIFA கூட்டமைப்பானது, பல்வேறு சர்ச்சைகள் காரணமாக 2026 ஆம் ஆண்டு கால்பந்து உலகக் கோப்பைப் போட்டியில் ரஷ்யா, காங்கோ மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளை FIFA போட்டிகளில் பங்கேற்பதில் இருந்து விலக்கியுள்ளது.
- இந்திய அணியானது, 2025 ஆம் ஆண்டு ICC சாம்பியன்சிப் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியில் நியூசிலாந்து நாட்டின் அணியை வீழ்த்தி மூன்றாவது முறையாக கோப்பையினை வென்றுள்ளது.
- பெங்களூரு நகரத்தின் பல்கலைக்கழகம் ஆனது, மறைந்த டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் நினைவாக மறுபெயரிடப்படும் என கர்நாடகா அரசு அறிவித்துள்ளது என்ற வகையில் அவரது பெயரைக் கொண்ட இந்தியாவின் முதல் கல்வி நிறுவனமாக இது இருக்கும்.

# தேசியச் செய்திகள்


## பசு ஔஷதி முன்னெடுப்பு

- நம் நாடு முழுவதும் ஒன்றிய அரசாங்கம் ஆனது, "பசு ஔஷதி" கடைகளைத் திறக்க உள்ளது.
- கால்நடை வளர்ப்பு மற்றும் பால் பண்ணையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு மிக மலிவு விலையில் பொது கால்நடை மருந்துகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- தற்போதுள்ள பிரதான் மந்திரி பாரதிய ஜன ஔஷதி மையங்களை (PMBJK) போன்ற கருத்தாக்கத்தில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

- பசு ஔஷதி கடைகள் ஆனது, கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பிரதான் மந்திரி கிசான் சம்ரிதி மையங்களால் (PMKSK) நடத்தப்படும்.
- 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 20வது கால்நடைகள் கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் கால்நடைகள் எண்ணிக்கையானது 535.78 மில்லியனாக இருந்தது.
- இதில் மொத்தப் பசுக்களின் எண்ணிக்கையானது (கால்நடை, எருமை, மிதுன் மற்றும் யாக் உட்பட) 302.79 மில்லியன் அடங்கும்.




## MeitY அமைச்சகத்தின் புதிய முன்னெடுப்புகள்




- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது, இந்தியாAI திட்டத்தின் கீழ் செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் முன்னெடுப்புகளின் தொடரை வெளியிட்டுள்ளது.

- இது செயற்கை நுண்ணறிவுக் கண்டுபிடிப்புகளை செயல்படுத்துவதற்காக என தரவுத் தொகுப்புகள், மாதிரிகள் மற்றும் வழக்காய்வு நிகழ்வுகளின் ஒரு களஞ்சியத்தினை வழங்குகின்ற AIKosha எனப்படும் பாதுகாப்பான தளத்தினை அறிமுகப்படுத்துகிறது.
- இது கருவிகள் மற்றும் பயிற்சிகளுடன் ஒருங்கிணைந்த மேம்பாட்டுச் சூழல் மூலம் ஒரு செயற்கை நுண்ணறிவு ஒழுங்குமுறை வகை கட்டமைப்புத் திறன்களையும் கொண்டு உள்ளது.
- செயற்கை நுண்ணறிவு கணக்கிடுதல் தளமும் சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இந்தத் தளமானது, வணிகங்கள் மற்றும் நிரலாக்க வல்லுநர்களுக்கு வலையமைப்பு மற்றும் சேமிப்பிற்கான வசதிகளுடன் மலிவு விலையிலான செயற்கை நுண்ணறிவு செயலாக்கம் மற்றும் அனுமானத் திறன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## BRICS CCI WE உச்சி மாநாடு 2025




- BRICS CCI WE ஆனது, ஐந்தாவது BRICS CCI WE வருடாந்திர மகளிர் உச்சி மாநாடு மற்றும் பாராட்டு விழாவினை நடத்தியது.
- இந்த ஆண்டு உச்சி மாநாட்டிற்கான கருத்துரு, 'Women Changemakers: Transforming the World, Shaping the Future' என்பதாகும்.
- இந்த நிகழ்வில் பெண்களில் முன்னோடிமிக்க மாற்றத்தினை ஏற்படுத்துபவர்களின் சாதனைகளைக் கொண்டாடும் வகையில் She for Her என்ற ஒரு நினைவுப் புத்தகம் வெளியிடப்பட்டது.
- கைலாஷ் மருத்துவமனைகள் குழுமத்தின் தலைவர் உமா சர்மாவுக்கு இந்த நிகழ்வில் தேசிய விருது வழங்கப்பட்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## வருவாய் திரட்டலுக்கான அமைச்சர்கள் குழு

- இயற்கைப் பேரிடர்கள் அல்லது இயற்கைப் பேரழிவுகள் ஏற்படும் சூழலில் வருவாய் திரட்டலுக்கான பரிந்துரைகளைப் பரிந்துரைப்பதற்காக சரக்கு மற்றும் சேவை வரி

சபையானது ஓர் அமைச்சர்கள் குழுவை (GoM) அமைத்துள்ளது.

- சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து வரும் வருவாயைப் பகுப்பாய்வு செய்வதற்காக இது மற்றொரு குழுவை அமைத்துள்ளது.
- இந்தக் குழுவிற்கு உத்தரப் பிரதேச மாநில நிதியமைச்சர் சுரேஷ் கன்னா தலைமை தாங்குகிறார்.
- அசாம், சத்தீஸ்கர், குஜராத், கேரளா, உத்தரகாண்ட் மற்றும் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த நிதியமைச்சர்கள் மற்ற உறுப்பினர்கள் ஆவர்.
- பேரிடர் கால வீத வரி மற்றும் அது நிர்ணயிக்கப்படுவதற்கான ஒரு கால அளவினை இந்தக் குழு பரிந்துரைக்கும்.
- சரக்கு மற்றும் சேவை வரியானது, பேரிடர் காலங்களில் சிறப்பு வரிகளை விதிக்க அனுமதிக்கிறது.
- 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்திற்குப் பிறகு கேரளாவின் நிதித் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக இதே போன்ற ஒரு குழு உருவாக்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டில் புனரமைப்பு முயற்சிகளுக்கு நிதியளிப்பதற்காக வேண்டி இரண்டு ஆண்டுகளுக்கு 1 சதவீதப் பேரிடர் வீத வரியினை விதிக்க கேரள மாநில அரசிற்கு அனுமதி வழங்கப்பட்டது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## சந்திரயான்-3 - நிலவின் மேற்பரப்பிற்கு அடியில் பனிக்கட்டி

- சந்திரயான்-3 தரவுகளின் படி, நிலவின் மேற்பரப்பிற்கு அடியில் காணப்படும் பனிக் கட்டி ஆனது முன்பு நம்பப்பட்டதை விட அதிகமாக இருக்கலாம்.
- இஸ்ரோவின் சந்திரயான்-3 கலமானது 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியன்று நிலவின் தென் துருவத்திற்கு அருகில் மிக வெற்றிகரமாக மிதமான வேகத்தில் தரை இறங்கியது.
- ChaSTE கருவியானது நிலவின் மேற்பரப்பின் வெப்பக் கடத்துத்திறன் மற்றும் வெப்ப நிலையை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்டது.
- இது மேற்பரப்பிலிருந்து 10 செ.மீ ஆழம் வரையில் காணப்படும் ஒரு வெப்பநிலையை அளவிட்டது.
- 'சிவ சக்தி தளம்/புள்ளி' என்று பெயரிடப்பட்ட கலத்தின் தரையிறக்க தளத்தில், வெப்ப நிலையானது பகலில் 82 டிகிரி செல்சியஸ் முதல் இரவில் சுமார் -170 டிகிரி செல்சியஸ்

வரையிலும் இருந்தது.




## SE2000 பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரம்





- இஸ்ரோ விண்வெளி நிறுவனமானது, சமீபத்தில் பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரத்தின் (SE2000) செயல் திறன் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
- இந்த சோதனையானது, முக்கியக் கூறு சோதனை (PHTA) என்றும், ஒரு பகுதியளவு மீக் குளிர் நிலையிலான இயந்திரங்களை உருவாக்கச் செய்வதற்கான முதல் வன்பொருள் சோதனை என்றும் அழைக்கப்படுகிறது.
- மீக்குளிர் நிலையிலான இயந்திரங்கள் திரவ ஆக்ஸிஜன் மற்றும் திரவ ஹைட்ரஜன் ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றன.
- அதே சமயம் ஒரு பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரங்கள் திரவ ஆக்ஸிஜன் மற்றும் மண்ணெண்ணெய் கலவையைப் பயன்படுத்துகிறது என்பதோடு இதில் மண்ணெண்ணெய் எளிதில் சேமிக்க இயலும்.
- இந்த எரிபொருள் கலவையானது மிக அதிக அடர்த்தி கொண்ட கணத்தாக்கு விசை,

குறைந்த நச்சுத்தன்மை (சேமிப்பு அம்சம் ரீதியாக) மற்றும் செலவு குறைந்த எரி பொருளுக்கான வாய்ப்பு போன்ற நன்மைகளை வழங்குகிறது.

## காண்டீவா வான்வழித் தாக்குதல் எறிகணை

- இந்தியாவின் மிகவும் சமீபத்திய மற்றும் மிகவும் மேம்பட்ட ஒரு வான்வழித் தாக்குதல் எறிகணையான அஸ்ட்ரா MK-III ஆனது, தற்போது அதிகாரப்பூர்வமாக காண்டீவா என மறுபெயரிடப்பட்டுள்ளது.
- எதிரி நாட்டு வான்வழி இலக்குகளை அவை 20 கிலோமீட்டர் உயரத்தில் உள்ள போது 340 கிலோமீட்டர் தூரத்திலிருந்தும், இலக்கு 8 கிலோமீட்டர் உயரத்தில் இருக்கும் போது 190 கிலோமீட்டர் தூரத்திலிருந்தும் தாக்கும் திறன் கொண்டதாக இருக்கும்.
- காண்டீவா எறிகணை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், இந்தியா உலகின் மிகவும் நீண்ட தூர தாக்குதல் வரம்புடைய BVR வான்வழி தாக்குதல் எறிகணைகளில் ஒன்றைக் கொண்டதாக விளங்க உள்ளது.
- இது 300 கிலோமீட்டர்கள் தூர தாக்குதல் வரம்பைக் கொண்ட PL-15 எறிகணையைக் கொண்ட சீனாவினையும், 240 கிலோமீட்டர் தூரத் தாக்குதல் வரம்பைக் கொண்ட AIM-174 BVRAAM எறிகணையினைக் கொண்டுள்ள அமெரிக்காவினையும் இந்தியா விஞ்ச அனுமதிக்கும்.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## அசாமில் படைச்சிறுத்தை மற்றும் பளிங்குப் பூனை

- அசாமின் டெஹிங் பட்காய் என்ற தேசியப் பூங்காவிற்குள் உள்ள ஒளிப்படக் கருவிகள் படைச் சிறுத்தையை (நியோஃபெலிஸ் நெபுலோசா) படம்பிடித்துள்ளன.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- பளிங்குப் பூனை (பார்டோஃபெலிஸ் மர்மொரோட்டா) என்பது கிழக்கு இமயமலையில் இருந்து தென்கிழக்கு ஆசியா வரையில் காணப்படும் ஒரு சிறியக் காட்டுப் பூனை ஆகும்.
- இது IUCN செந்நிறப் பட்டியலில் அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனம் (NT) ஆகப்

பட்டியலிடப்பட்டுள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## நைட் ஃபிராங்க் நிறுவனத்தின் செல்வ வளம் குறித்த அறிக்கை 2025


- தற்போது 85,698 என்ற உயர் நிகர சொத்து மதிப்புள்ள தனிநபர்கள் எண்ணிக்கையுடன் (HNWIs) உலகளவில் நான்காவது இடத்தைப் பிடித்து, ஒரு மிக முன்னணி உலகளாவிய செல்வ வளம் கொண்ட மையமாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- இது அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பானுக்கு அடுத்தபடியாக உள்ளது.
- குறைந்தபட்சமாக சுமார் 1 மில்லியன் டாலர் முதலீடு செய்யக்கூடிய சொத்துக்களைக் கொண்ட தனிநபர்கள் என வரையறுக்கப்படும் HNWI நபர்கள் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் உலகளவில் 4.4% அதிகரித்துள்ளது.
- குறிப்பிடத்தக்க வகையில், 100 மில்லியன் டாலருக்கும் அதிகமான சொத்துக்களைக் கொண்ட அதி உயர் நிகர சொத்து மதிப்புள்ள தனிநபர்களின் (UHNWIs) எண்ணிக்கை என்பது முதல் முறையாக 100,000 எண்ணிக்கையினைத் தாண்டியது.
- 2024 ஆம் ஆண்டில், UHNWI எண்ணிக்கையில் சுமார் 5.2% அதிகரிப்புடன் அமெரிக்கா உலகிலேயே முன்னணியில் இருந்தது.

- அதனைத் தொடர்ந்து, சுமார் 5% விகித அதிகரிப்புடன் ஆசியாவும், 4.7% அதிகரிப்புடன் ஆப்பிரிக்காவும் இடம் பெற்றுள்ளன.

| | US$10m+ population | Share of global US$10m+ population |
|---|---|---|
| US | 905,413 | 38.7% |
| Chinese mainland | 471,634 | 20.1% |
| Japan | 122,119 | 5.2% |
| India | 85,698 | 3.7% |
| Germany | 69,798 | 3.0% |
| Canada | 64,988 | 2.8% |
| UK | 55,667 | 2.4% |

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## நீதிபதி V. இராமசாமி




- 96 வயதான முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி V. இராமசாமி சமீபத்தில் காலமானார்.
- 1962 ஆம் ஆண்டு கூடுதல் அரசு வழக்கறிஞராகவும், 1969 ஆம் ஆண்டில் மாநில அரசு வழக்கறிஞராகவும் நியமிக்கப்பட்டார்.
- 1971 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்றார்.
- அவர் 1987 ஆம் ஆண்டு, பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டு, 1989 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பதவி

உயர்வு பெற்றார்.

- பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தில் அவர் பணியாற்றிய காலத்தில், மிக அதிகச் செலவினம் செய்ததற்காக அவருக்கு எதிராக ஒரு பதவி நீக்கத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது, ஆனால் 1993 ஆம் ஆண்டு அந்தத் தீர்மானம் தோல்வியுற்றது.

## உலக நிலையான மேம்பாட்டு உச்சி மாநாடு 2025

- 2025 ஆம் ஆண்டு உலக நிலையான மேம்பாட்டு உச்சி மாநாடு (WSDS) ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "Partnerships for Accelerating Sustainable Development and Climate Solutions" என்பதாகும்.
- நிலையான மேம்பாட்டு இலக்குகள் குறித்த சமீபத்திய முன்னேற்ற அறிக்கையின்படி, 169 இலக்குகளில், சுமார் 14% மட்டுமே இலக்கினை எட்டும் பாதையில் உள்ளன, அதே நேரத்தில் 20% இலக்குகள் கண்காணிக்கப்படவில்லை.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியா அதன் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை 7.93% என்ற அளவில் குறைத்தது.




## கடிதங்களின் திருவிழா 2025




- கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் சாகித்ய அகாடமியானது, அதன் வருடாந்திர கடிதங்கள் திருவிழாவை புது டெல்லியில் ஏற்பாடு செய்துள்ளது.
- இது ஆசியாவின் மிகப்பெரியதொரு இலக்கியத் திருவிழாவாகும் என்பதோடு இந்தத்

திருவிழாவில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 50க்கும் மேற்பட்ட மொழிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 700 எழுத்தாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.

- இந்தத் திருவிழாவின் கருத்துரு, "Indian Literary Traditions" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★